தினமணி

# புலி வால் பிடித்த நாயர்

பழ. நெடுமாறன்

First Published : 28 Dec 2011 01:43:05 AM IST



உச்ச நீதிமன்றம் 27-2-2006 அன்று அளித்த தீர்ப்பின்படி முல்லைப் பெரியாறு அணையில் 142 அடிவரை நீரைத் தேக்க கேரள அரசு ஒப்புக்கொள்ளும்படி செய்ய வேண்டும்.

புதுப்பிக்கப்பட்ட அணை வலிமையாகவும், பாதுகாப்பாகவும் இருப்பதால் புதிய அணை கட்டும் எந்த முயற்சியிலும் ஈடுபடக்கூடாது என கேரள அரசுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.

மத்திய நீர்வள ஆணையம் 1980-ம் ஆண்டில் பரிந்துரைத்தபடியும் 2006-ம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த ஆணையின்படியும் அணையை வலுப்படுத்தும் வேலையில் எஞ்சியுள்ள பேபி அணையை வலுப்படுத்தும் பணியை செய்யவிடாமல் கேரள அரசு 31 ஆண்டு காலமாக தடுத்து வருகிறது. எனவே, அணையை வலிமைப்படுத்தும் பணிகளுக்கும் வழக்கமான பராமரிப்புப் பணிகளுக்கும் இடையூறு எதுவும் செய்யாமல் இருப்பதுடன் அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேரள அரசுக்கு அறிவுரை கூற வேண்டும். பெரியாறு அணை நீரைத் தேக்குவதற்காக தமிழகத்துக்குக் குத்தகையாக வழங்கப்பட்ட இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் அகற்றுமாறு கேரள அரசுக்கு அறிவுறுத்த வேண்டும்.

முல்லைப் பெரியாறு அணை மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்ட இடம், அத்துடன் இணைந்துள்ள கட்டுமானங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொருட்டில் மத்திய தொழில் பாதுகாப்புப் படையை ஈடுபடுத்த வேண்டும்.

முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் ஆபத்து ஏற்பட்டால் மேற்கொள்ள வேண்டிய பணிகளைத் திட்டமிட அமைக்கப்பட்ட நிபுணர் குழு பற்றிய அறிவிப்பு ஆணையைத் திரும்பப்பெற வேண்டும்.

மேலே கண்ட கோரிக்கைகளை உள்ளடக்கிய மனு ஒன்றை பிரதமர் மன்மோகன் சிங்கிடம் முதல்வர் ஜெயலலிதா அளித்து வற்புறுத்தியுள்ளார்.

இந்தக் கோரிக்கைகள் அனைத்தும் தமிழக மக்களின் ஒருமித்த கோரிக்கைகளாகும். இதற்காகத்தான் தேனி உள்ளிட்ட ஐந்து மாவட்ட மக்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

அவர்களுக்கு ஆதரவாக தமிழகத்தின் பிற பகுதிகளிலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, கம்பம் பள்ளத்தாக்கில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு அணையைப் பாதுகாக்கச் சென்று தினமும் போராடி வருகிறார்கள்.

பெரியாறு அணைப் பிரச்னைக்காக ஒருவர் உயிர்த் தியாகம் செய்தும் மற்றுமிருவர் தீக்குளித்து உயிர் ஊசலாடும் நிலையிலும் உள்ளனர்.

தமிழகத்தில் உள்ள சகல கட்சிகளும் இப்பிரச்னைக்காக தனித்தனியாகவும், கூட்டாகவும் போராட்டங்களை நடத்தி வருகின்றன.

தமிழகத்திலிருந்து உணவுப் பொருள்கள், பழங்கள், காய்கறிகள், பால், முட்டை, கோழி, ஆடு, மாடு போன்ற எந்தப் பொருளையும் கேரளத்துக்கு அனுப்ப மறுத்து தமிழக விவசாயிகள் நடத்தும் போராட்டம் வரலாறு காணாததாகும். தங்களுக்கு இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை. பெரியாறு அணைப் பிரச்னையில் நல்ல தீர்வு ஏற்பட வேண்டுமானால் இவ்வாறு செய்வதைத் தவிர, வேறு வழியில்லை என்ற உணர்வுடன் அவர்கள் போராடி வருகிறார்கள். இந்தப் போராட்டங்கள் மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்கள் ஆகும். பெரியாறு பாசன நீர் பாயும் ஐந்து மாவட்டங்களில் மட்டுமல்ல, தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் சகல தரப்பினரும் தாமாக முன்வந்து இந்தப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

பெரியாறு அணைப் பிரச்னை தீரும்வரை கேரள மாநிலத்துக்கு எந்தப் பொருளையும் ஏற்றிச் செல்ல மாட்டோம் என லாரி உரிமையாளர்கள் அறிவித்து அதைச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழக வணிகர்கள் கடையடைப்பு நடத்தி தங்கள் உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

வெளிவரவுள்ள உச்ச நீதிமன்றத் தீர்ப்பு தனக்கு எதிராக அமைந்துவிடுமோ என்ற அச்சம் கேரளத்துக்கு இருக்கிறது. எனவே, அண்மைக்காலமாக நிலநடுக்க அபாயப் புகாரை முன்வைத்து கேரளம் பொய்ப்பிரசாரம் செய்கிறது. கேரள முதலமைச்சரும், மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் கேரள அமைச்சர்களும் மத்திய அரசில் உள்ள முக்கிய கேரள அதிகாரிகளும் இணைந்து பிரதமருக்கு நெருக்குதல் கொடுத்து புதிய ஆய்வுக் குழு ஒன்றை நியமிக்கச் செய்திருக்கிறார்கள். பெரியாறு அணைப் பகுதியில் நிலநடுக்கம், வெள்ளப்பெருக்கு போன்ற எதிர்பாராத நிகழ்வுகள் ஏற்பட்டால் அவற்றை எதிர்கொள்வதற்கான செயல்திட்டங்களை வகுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் சார்பில் தனியான ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆணையத்துக்கு தலைவராக பிரதமர்தான் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கேரள அரசின் சூழ்ச்சிக்கு பிரதமர் இணங்கியிருக்கிறார் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் அமைத்துள்ள குழு அணை தொடர்பாக பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. தனது அறிக்கையை பிப்ரவரி மாதம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளது. இந்த நிலைமையில் அணையின் வலிமையைப் பரிசோதிக்க மற்றொரு குழுவை அமைக்க வேண்டிய அவசியம் என்ன?

இந்தக் குழு அமைக்கப்பட்ட முறை ஆழமான ஐயங்களுக்கு வழிவகுத்திருக்கிறது. ஏற்கெனவே சில ஆண்டுகளுக்கு முன்னால் கேரள அரசின் சார்பில் ரூர்க்கி ஐ.ஐ.டி.யைச் சேர்ந்த பேராசிரியர் டி.கே. பால் என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட குழு பெரியாறு அணையைப் பரிசோதித்துவிட்டு அணை பலவீனமாக இருக்கிறது என்ற ஓர் அறிக்கையை கொடுத்தது. ஆனால், இந்த அறிக்கையையும் அணைப் பிரச்னை தொடர்பான வழக்கில் ஒரு சாட்சியாக டி.கே. பாலையும் சேர்க்க வேண்டும் என்ற கேரள அரசின் கோரிக்கையை உச்ச நீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது. ஆனால், உச்ச நீதிமன்றம் ஏற்க மறுத்த ஒருவரை பிரதமர் ஆய்வுக் குழுவில் நியமித்திருப்பது நேர்மையற்ற செயலாகும்.

புதிய அணையை கட்டுவது குறித்து ஆய்வு செய்வதற்கான எந்த கோரிக்கையும் கேரள அரசு இதுவரை அனுப்பவில்லை என மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெயந்தி நடராசன் கூறியிருக்கிறார். ஆனால், மத்திய அரசின் அனுமதியைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் புதிய அணை கட்டுவதற்கான ஆய்வை முடித்து அணை கட்டுவதற்கான கருத்துருவைத் தயாரித்து உச்ச நீதிமன்றம் அமைத்த விசாரணைக் குழுவிடம் கேரள அரசு அளித்தது எப்படி? மத்திய அரசின் அனுமதி பெறாமல் இவ்வாறு நடக்க கேரள அரசு துணிந்ததற்குப் பின்னணி என்ன?

இவ்வாறு சட்டத்துக்குப் புறம்பான வகையிலும் உச்ச நீதிமன்றம், மத்திய அரசு ஆகியவற்றின் ஆணைகளைப் புறக்கணித்தும் கேரளம் தொடர்ந்து செயல்படுகிறது. இதற்கு மேலாக தமிழ்நாட்டையும் இந்திய அரசையும் ஏமாற்றுவதற்காக பேச்சுவார்த்தைக்குத் தயார் என்ற நாடகத்தை நடத்துகிறது. கேரள முதலமைச்சர் உம்மன் சாண்டியின் தலைமையில் அனைத்துக் கட்சிக்குழு ஒன்று பிரதமரை நேரில் சந்தித்து இரு மாநில முதல்வர்கள் பேச்சுக்கு ஏற்பாடு செய்யும்படி வேண்டுகோள் விடுத்தது. அதை ஏற்று பிரதமரும் தமிழக முதலமைச்சருக்குக் கடிதம் எழுதினார்.

15-12-11 அன்று உச்ச நீதிமன்றத்தில் இரு மாநில முதல்வர்கள் பேச்சுக்கு ஏற்பாடு செய்ய பிரதமருக்கு வேண்டுகோள் விடுக்கும்படி கேரளம் முறையீடு செய்தது. ஆனால், அதை ஏற்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.

பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்னையைத் தீர்க்கத் தயார் என கூறும் உம்மன் சாண்டி புதிய அணையைக் கட்டவேண்டும் என்ற முடிவை எப்போதும் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்றும் நிபந்தனை விதிக்கிறார். புதிய அணை கட்டப்பட்டாலும் தண்ணீர் கிடைக்கும் அளவைப் பொறுத்துதான் தமிழகத்துக்குத் தரப்படும் என்றும் கூறுகிறார். புதிய அணையைக் கட்டும்போது முல்லைப் பெரியாறு அணையை எவ்வாறு, எந்தெந்த நிலைகளில் உடைப்பது என்பது குறித்தும் உடைக்கப்படும் அணையின் பகுதிகளைப் புதிய அணையின் கட்டுமானத்துக்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தும் கேரள அமைச்சர்களும் அரசியல் தலைவர்களும் பேசுகிறார்கள்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை கடந்த 15 ஆண்டுகாலத்துக்கு மேலாக கேரளம் மதிக்காதது போலவே, உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட தொழில் நுட்பக் குழுவினரின் ஆய்வையும் கேரள அதிகாரிகள் புறக்கணிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இவர்கள் கூறியபடி அந்தக் குழுவினர் செயல்பட மறுத்ததுதான் இதற்குக் காரணமாகும்.

இடுக்கி அணை நிரம்பினால் கேரளம் 2,391 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். அம்மாநிலத்தில் மொத்த மின்உற்பத்தியில் இது 20 விழுக்காடு ஆகும். இப்போதுள்ள நிலைமையில் பெரியாறு அணையில் உள்ள நீரை முழுமையாக இடுக்கிக்குக் கொண்டுபோனால்தான் இவர்களின் இந்த நோக்கம் நிறைவேறும். எனவேதான் புதிய அணை கட்டுவது என்ற பெயரில் பெரியாறு அணையை இடிப்பதில் குறியாக இருக்கிறார்கள்.

கேரளம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களில் உள்ள அகில இந்திய கட்சிகள் எதிர்எதிர் நிலை எடுத்துள்ளன. இக்கட்சிகளின் அகில இந்தியத் தலைமைகள் வாய்மூடி மௌனம் சாதிக்கின்றன. இரு மாநிலத் தலைமைகளையும் அழைத்துப் பேசி பிரச்னைக்குத் தீர்வு காணவோ அல்லது தவறு செய்யும் மாநிலத் தலைமையைக் கண்டிக்கவோ அகில இந்தியத் தலைமைகள் முன்வரவில்லை.

உண்மையைச் சொல்லப்போனால் தேசியத் தலைமைகள் இப்பிரச்னையில் செயலற்றுவிட்டன. இதன் விளைவாக, தேசிய ஒருமைப்பாடு செயல் இழக்கும். உடலின் ஒருபகுதி செயல் இழக்கும்போது மெல்லமெல்ல உடல் முழுவதும் அது பரவும். இந்த அபாயம் நாட்டைச் சூழ்ந்து வருகிறது.

தங்களுடைய அரசியல் ஆதாயத்துக்காக கேரள அரசியல்வாதிகள் பொய்க்கூக்குரல் எழுப்பி தங்கள் மாநில மக்களிடம் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத் தீர்ப்பு கூறப்படும்வரை காத்திராமல், புதிய அணை என கேரள அரசியல்வாதிகள் குதிக்கிறார்கள். கேரள உயர் நீதிமன்றத்தில் அம் மாநில அட்வகேட் ஜெனரல் அணை வலிமையாக இருப்பதாகவும் அணை உடைந்தாலும் அந்தத் தண்ணீர் கீழே உள்ள இடுக்கி மற்றும் இரு அணைகளில் தேக்கப்படும். ஆகவே, மக்களுக்கு அபாயம் இல்லை என்று கூறியிருக்கிறார். அவர்மீது நடவடிக்கை எடுக்கிற துணிவு கேரள அரசுக்கு இல்லை. அவ்வாறு எடுத்தால் உச்ச நீதிமன்றம் தலையிடும் என்ற அச்சம் இருக்கிறது. உச்ச நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை இல்லாவிட்டால் அங்குள்ள தங்களது வழக்கைத் திரும்பப் பெறும் துணிவு கேரள அரசியல்வாதிகளுக்கு உண்டா?

கொதித்துப் போராடும் தமிழக மக்களின் உணர்ச்சி விரைவில் வடிந்துவிடும் என கேரள அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள். தமிழகக் கட்சிகள் ஒருபோதும் ஒன்றுபட்டுப் போராடப்போவதில்லை என மத்திய அரசு நினைக்கிறது.

உச்ச நீதிமன்றத்தில் சட்டரீதியாக நமது உரிமைகளை நிலைநிறுத்த தமிழக அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அனைத்துக் கட்சிகளின் ஆதரவை முதல்வர் ஜெயலலிதா நாடிப்பெற வேண்டும். கட்சிகளும் அவருக்கு முழுமையான ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இது ஒரு கட்சிப் பிரச்னை அல்ல. 5 மாவட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்னை என்பதை மனதில்கொண்டு அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

தமிழக விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகள், பழங்கள், முட்டை, பால் போன்றவற்றை கேரளத்துக்கு அனுப்பாமல் தாங்கள் நஷ்டத்தைச் சந்திக்க நேர்ந்தாலும் சகித்துக்கொண்டு உறுதியாகப் போராடுகிறார்கள். இந்தப் போராட்டம் ஒன்றுதான் கேரள அரசியல்வாதிகளைச் சிந்திக்க வைக்கும். எனவே, விவசாயிகளின் இந்தப் போராட்டத்துக்கு தமிழக அரசு ஆதரவுக் கரம் நீட்ட வேண்டும். நமது விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை அந்தந்தப் பகுதிகளில் அரசே கொள்முதல் செய்து அந்தந்தப் பகுதிகளில் உள்ள சத்துணவுக் கூடங்களுக்கு வழங்க வேண்டும். இதன்மூலம் விவசாயிகளின் நஷ்டம் தவிர்க்கப்படும். பொருளாதாரத் தடைப் போராட்டமும் வெற்றிபெறும்.

கேரள மக்கள் பயன்படுத்தும் மாட்டிறைச்சியில் 90 சதவிகிதம் தமிழகத்திலிருந்து அனுப்பப்படும் அடிமாடுகளின் மூலம் கிடைக்கிறது. எனவே, தமிழக அரசே மாட்டிறைச்சியைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை பல பகுதிகளில் அமைத்து விவசாயிகளின் அடிமாடுகளை விலைக்குப் பெற்று, உற்பத்தியாகும் மாட்டிறைச்சியை அரேபிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அரசுக்கும் விவசாயிகளுக்கும் அதிக வருமானம் கிடைக்கும். கேரள அரசியல்வாதிகளையும் பணியவைக்க முடியும்.

பெரியாறு அணை குறித்து பொய்யான கூக்குரலை எழுப்பி கேரள மக்களை வீண் அச்சத்துக்கு உள்ளாக்கிய கேரள அரசியல்வாதிகள், தண்ணீர் கிடைக்காத தமிழக மக்கள் கொதித்தெழுந்து பொருளாதாரத் தடைப் போராட்டம் நடத்தும் அளவுக்குச் சென்றதை சற்றும் எதிர்பாராத நிலையில், இப்போது என்ன செய்வது என்பது புரியாமல் திணறுகிறார்கள். புலிவால் பிடித்த நாயரின் நிலையாக கேரள அரசியல்வாதிகளின் நிலை ஆகிவிட்டது.

**நெல் விவசாயிகளுக்கு ரூ. 210 கோடி இழப்பீடு**

வி. தேவதாசன்

First Published : 28 Dec 2011 01:21:31 AM IST

சென்னை, டிச. 27: தமிழக நெல் விவசாயிகளுக்கு கடந்த ஆண்டு ஏற்பட்ட மகசூல் இழப்புக்காக ரூ. 210 கோடி இழப்பீடு வழங்க இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம் (அக்ரிகல்ச்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆஃப் இந்தியா) செவ்வாய்க்கிழமை ஒப்புதல் வழங்கியது.

இதில் சம்பா, தாளடி நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்காக ரூ. 209 கோடியே 20 லட்சமும், கோடைக் காலத்தில் நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்காக ரூ. 1 கோடியே 17 லட்சமும்

இழப்பீடாக வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் 14 மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 2 லட்சத்து 14 ஆயிரத்து 56 விவசாயிகள் பயன்பெறுவார்கள்.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேரும் விவசாயிகளுக்கு மழை, வறட்சி, பூச்சித் தாக்குதல் போன்ற காரணங்களால் மகசூல் பாதிப்பு ஏற்படும்போது வேளாண் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்குகிறது. அந்த வகையில் கடந்த ஆண்டு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 7 லட்சத்து 68 ஆயிரத்து 803 நெல் சாகுபடி விவசாயிகள் சேர்ந்தனர். இவர்களில் பலருக்கு கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழையின் காரணமாக மகசூல் இழப்பு ஏற்பட்டது.

தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை சார்பில் மகசூல் இழப்பீடு மதிப்பீடு செய்யப்பட்டு, வேளாண் காப்பீட்டு நிறுவனத்தின் மண்டல அலுவலகம் மூலம் இழப்பீட்டுக்கான முறையீடு புது தில்லியில் உள்ள தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டது. மத்திய வேளாண்மை அமைச்சகம் மற்றும் பயிர்க் காப்பீடு வழங்குவதற்கான இயக்குநர்கள் குழு இழப்பீடு முறையீட்டுக்கு ஒப்புதல் அளித்தன. எனினும், வேளாண் காப்பீட்டு நிறுவனத்தின் தலைவர் இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டியிருந்தது.

இறுதி ஒப்புதல் வழங்குவதில் ஏற்பட்ட கால தாமதம் தமிழக விவசாயிகளிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. அண்மையில் பல்வேறு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பயிர்க் காப்பீடு வழங்கப்படாததைக் கண்டித்து விவசாயிகள் வெளிநடப்பும், போராட்டங்களும் நடத்தினர்.

இந்தச் சூழலில், தமிழக நெல் விவசாயிகளுக்கு ரூ. 210 கோடியே 38 லட்சம் இழப்பீடு வழங்க ஒப்புதல் அளித்து இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தின் தலைவர் அசோக்குமார் ராய் தில்லியில் செவ்வாய்க்கிழமை கையெழுத்திட்டார். இதனைத் தொடர்ந்து தமிழகத்தைச் சேர்ந்த நெல் விவசாயிகளுக்கு இன்னும் ஒரு வார காலத்துக்குள் பயிர்க் காப்பீட்டுக்கான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட உள்ளது.

இது குறித்து இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தின் சென்னை மண்டல மேலாளர் சி. அன்பரசு கூறியதாவது:

நெல் விவசாயிகளுக்கு ரூ.210 கோடி இழப்பீடு வழங்க வேளாண் காப்பீட்டு நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளது. விவசாயிகளிடம் ரூ.64 கோடி பிரிமியமாக வசூல் செய்துள்ளோம். இந்தத் தொகை, மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.73 கோடி, மாநில அரசின் பங்குத் தொகை ரூ.73 கோடி ஆகிய மூன்றும் சேர்த்து விவசாயிகளுக்கு ரூ.210 கோடி வழங்கப்படும்.

எங்கள் தலைமை அலுவலகம் ஒப்புதல் அளித்துள்ள நிலையில், மாநில அரசின் பங்குத் தொகை ரூ.73 கோடியை வழங்குமாறு கேட்டு இப்போது தமிழக அரசுக்கு கடிதம் எழுதியுள்ளோம். தமிழக அரசிடமிருந்து அந்தத் தொகை கிடைத்த பின் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

எனினும், விவசாயிகளிடம் வசூலிக்கப்பட்ட பிரிமியம் மற்றும் மத்திய அரசின் பங்குத் தொகை ஆகியவை சேர்த்து ரூ.137 கோடிதான் எங்களிடம் உள்ளது. இந்தத் தொகையை அனைத்து

வங்கிகளுக்கும் புதன்கிழமை அனுப்பி விடுவோம். இத் தொகை உடனடியாக விவசாயிகளுக்குச் சென்று சேர வேண்டும் என்பதில் தமிழக அரசு ஆர்வமாக உள்ளது. ஆகவே, இந்த வார இறுதிக்குள் எல்லா விவசாயிகளுக்கும் இழப்பீட்டுத் தொகை கிடைத்து விடும் என்றார் அன்பரசு.

**தோட்டக்கலைத் துறைக்கு புதிய ஆணையர்**

First Published : 28 Dec 2011 01:00:11 AM IST

சென்னை, டிச. 27: தோட்டக்கலைத் துறையின் ஆணையராக சந்தோஷ்பாபு நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருடன் உமாசங்கர் உள்ளிட்ட மேலும் இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து தலைமைச் செயலாளர் தேவேந்திரநாத் சாரங்கி வெளியிட்ட உத்தரவு:

தோட்டக்கலைத் துறையின் ஆணையராக செயல்பட்டு வந்த கே.செல்லமுத்து, உடனடியாக அந்தப் பதவியில் இருந்து விடுவிக்கப்படுகிறார். அவருக்குப் பதிலாக, அப்பதவிக்கு தகவல் தொழில்நுட்பத் துறையின் முன்னாள் செயலாளர் சந்தோஷ்பாபு நியமிக்கப்பட்டுள்ளார்.

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நிலவரித் துறை இயக்குநராக இருந்த உமாசங்கர், சென்னையில் ஒழுங்கு நடவடிக்கைகள் துறை ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சென்னையில் ஒழுங்கு நடவடிக்கைகள் துறை ஆணையராக இருந்த எஸ்.முருகைய்யா, நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நிலவரித் துறை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேளாண் துறைக்கு முக்கியத்துவம்: வேளாண் துறைக்கு தமிழக அரசு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. சிறப்பாகப் பணியாற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், அந்தத் துறையில் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர்.

வேளாண் துறையில் கூடுதல் இயக்குநராக பணியாற்றி வந்த பொன்னுசாமி மீது பல்வேறு புகார்கள் கூறப்பட்டதைத் தொடர்ந்து, அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். இந்த நிலையில், தோட்டக்கலைத் துறை ஆணையரும் மாற்றப்பட்டுள்ளார்.

மத்திய அரசின் தேசியத் தோட்டக்கலை இயக்ககத் திட்டத்திலும், ஊழியர்களின் பணியிட மாற்றங்கள் தொடர்பாகவும் தோட்டக்கலைத் துறையில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகப் புகார் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அந்தத் துறையின் ஆணையரான கே.செல்லமுத்து மாற்றப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி**

First Published : 27 Dec 2011 12:08:45 PM IST

கோவில்பட்டி, டிச. 26: தூத்துக்குடி மாவட்டம், திருமங்கலக்குறிச்சியில் திருந்திய நெல் சாகுபடி பற்றிய தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது.

தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டத்தின்கீழ் உப்போடை உப வடி நிலப் பகுதி விவசாயிகளுக்கு நடைபெற்ற இப் பயிற்சியை கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் ராம்குமார் தொடங்கி வைத்தார்.

திருந்திய நெல் சாகுபடியில் நாற்றங்கால் தயாரித்தல், ஒற்றை நாற்று நடவு முறை, ஒருங்கிணைந்த உர நிர்வாகம், நெல் சாகுபடியில் களை மற்றும் நீர் நிர்வாகம், மண் மாதிரி சேகரித்தல் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. திருந்திய நெல் சாகுபடி பற்றிய தொழில்நுட்ப கையேடும் வழங்கப்பட்டது. உதவிப் பேராசிரியர் பூமிராஜ், இளநிலை ஆராய்ச்சியாளர்கள் ருக்மணி, தேவசாந்தி, தங்கமாரியப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**70 ஆயிரம் டன் நெல் கொள்முதல் இலக்கு**

First Published : 27 Dec 2011 09:34:23 AM IST

ஈரோடு, டிச. 26: இரண்டாம் போக நெல் சாகுபடியில் 70 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ÷ஈரோடு மாவட்டத்தில் கீழ் பவானி, காலிங்கராயன், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் மேட்டூர் மேற்குக்கரை வாய்க்கால் பாசனம் மூலமாக நெல் பயிரிடப்பட்டுள்ளது. அறுவடைக் காலங்களில் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு கொள்முதல் செய்யப்படுகிறது. ÷கிரேடு-ஏ என்று அழைக்கப்படும் சன்ன ரகமான ஏடிடி36, 38, 39, ஐஆர்20, ஐஆர்50, கோ 43 ஆகிய ரகங்கள் ஒரு கிலோ ரூ. 11.30க்கும், மோட்டா ரகமான ஏடிடி16 ரகம் ரூ. 11.80க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.

÷முதல்போக சாகுபடியில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப் பகுதியில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 5,012 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

÷இன்னும் சில நாட்களில் இரண்டாம் போக நெல் அறுவடை தொடங்க உள்ளது. இந்தப் பணிகள் 4 மாதங்களுக்கு நடைபெறும். மாவட்டம் முழுவதும் 28 இடங்களில் கொள்முதல் நிலையங்களைத் திறக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். 70 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

டிச. 30-ல் வெண்பன்றி வளர்ப்புப் பயிற்சி

First Published : 27 Dec 2011 11:22:59 AM IST

பெரம்பலூர், டிச. 26: பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் அமைந்துள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் வெண்பன்றி வளர்ப்பு குறித்த இலவசப் பயிற்சி டிச. 30-ம் தேதி நடைபெறுகிறது என்றார் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். இரா. மாரிமுத்து.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய வளாக பயிற்சிக் கூடத்தில் வெண்பன்றி வளர்ப்புத் தொழிலில் ஆர்வமுள்ள சிறு, குறு விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுவினர் மற்றும் படித்த சுயதொழில் தொடங்க ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு வெண்பன்றி வளர்ப்பு பற்றிய ஒருநாள் இலவசப் பயிற்சி டிச. 30-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்தப் பயிற்சியில் வெண் பன்றி வளர்ப்புக்கான சீமைப் பன்றி இனங்களைத் தேர்வு செய்தல், கொட்டகை அமைத்தல், தீவன மேலாண்மை, பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. எனவே, இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள், சுய உதவிக் குழுவினர், வெண்பன்றிப் பண்ணை அமைக்க விருப்பமுள்ளவர்கள் தங்களது பெயரை, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை 04328-293592, 293251 என்ற எண்களிலும், கால்நடை அறிவியல் தொழில்நுட்ப வல்லுனர் மருத்துவர் பி. சிவகுமாரை 9443586301 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றார் அவர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

வர மிளகாய் வரத்து அதிகரிப்பு: கிலோவுக்கு ரூ. 20 விலை சரிவு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2011,01:38 IST

ஈரோடு: வடமாநிலத்தில் இருந்து புது வரத்து துவக்கத்தால், வர மிளகாய் கிலோ 20 ரூபாய் குறைந்து, 90 ரூபாய்கு விற்கப்படுகிறது. மத்திய பிரதேசம், ஆந்திர மாநிலம் குண்டூர், தமிழகத்தில் ராமநாதபுரம், விருதுநகர், நெல்லை மாவட்டங்களில் இருந்தும், மூலனூர், கொளத்தூர் பகுதியில் இருந்தும், வரமிளகாய் உற்பத்தியாகிறது. இங்கிருந்து, ஈரோட்டுக்கு விற்பனைக்கு வருகிறது.

தற்போது, மிளகாய் அறுவடை சீஸன் துவங்கியுள்ளது. மத்திய பிரதேசத்தில் அறுவடை முடிந்ததால், அங்கிருந்து வரத்து அதிகரித்துள்ளது. இதர பகுதியில் ஓரிரு வாரங்களில் அறுவடை துவங்கி விடும். இதன் காரணமாக மிளகாய் வரத்து கணிசமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. சென்ற வாரம் மிளகாய் கிலோ 110 ரூபாய்க்கு விற்றது. தற்போது, 20 ரூபாய் குறைந்து, 90 ரூபாய்க்கு விற்க்கப்படுகிறது. நடப்பாண்டு விளைச்சல் அதிகரிப்பால், வரத்து அதிகரித்து விலை குறைய வாய்ப்புள்ளது என வியாபாரிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். ஈரோடு மளிகை மண்டி உரிமையாளர் கோகுலக்கண்ணன் கூறியதாவது: வடமாநிலம் மற்றும் ஆந்திரா மாநிலத்தில் இருந்து, தமிழகத்துக்கு வர மிளகாய் வரத்து அதிகரித்துள்ளது. சென்ற ஆறு மாதங்களாக மிளகாய் விலை உயர்ந்து. புது வரத்தால் திடீரென கிலோவுக்கு, 20 ரூபாய் வரை குறைந்துள்ளது. தை மாதம் நெல்லை, விருதுநகர், ராமநாதபுரம் மாவட்டங்களில் இருந்து வரத்து அதிகமாக இருக்கும். அப்போது, மேலும் விலை குறைய வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

### அரிசி கிலோ ஒரு ரூபாய் குறையும்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2011,03:00 IST

மதுரை:""மதுரையில் 15 நாட்களில் அறுவடை முடிந்து, புது அரிசி சந்தைக்கு வருவதால், அதன் விலை கிலோவிற்கு ஒரு ரூபாய் குறையும்," என்கிறார் அரிசி ஆலை உரிமையாளர் சங்க செயலாளர் சந்திரன்.நேற்றைய விலை குறித்து, அவர் கூறியதாவது :ஒரு கிலோ மதுரை டீலக்ஸ் பொன்னி முதல் ரகம் ரூ.33, அடுத்த ரகம் ரூ.27, செல்லப்பொன்னி ரூ.23, ஒட்டுச் செல்ல பொன்னி ரூ.21, ஐ.ஆர்., 20.50 முதல் ரகம் ரூ.24.50, அடுத்த ரகம் ரூ.23.50, ஐ.ஆர்., 36 ரூ.22.50க்கு விற்கப்பட்டது.
காவிரி சோனா பொன்னி ரூ.27.50 கர்நாடகா டீலக்ஸ் பொன்னி பழசு ரூ.34.50, மதுரை வெள்ளை பொன்னி பழசு ரூ.36, பச்சரிசி பொன்னி ரூ.30, சூப்பர் சன்னம் பச்சரிசி ரூ.36, மாவு பச்சரிசி ரூ.22.50, பிரியாணி அரிசி ரூ.47, முதல் ரகம் ரூ.53க்கு விற்கப்பட்டது, என்றார்.

### நெற்பயிரில் குருத்துபூச்சி கட்டுப்படுத்த அதிகாரி யோசனை

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2011,02:58 IST

முக்கூடல் : நெல்பயிரில் ஏற்படும் குருத்துப்பூச்சியை கட்டுப்படுத்தி அதிக மக‘லை பெற்றிட விவசாயிகளுக்கு முக்கூடல் வேளாண் உதவி இயக்குநர் ஆலோசனை தெரிவித்தார்.பாப்பாக்குடி வட்டாரத்தில் தற்போது பசான பருவத்தில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு தங்கள்

நெல் பயிரில் குருத்துப்பூச்சியால் பாதிப்படைந்து மக‘ல் பாதிக்கப்பட்டது என விவசாயிகள் தெரிவித்தனர். இந்த ஆண்டும் மக‘ல் பாதிக்கப்படாமல் இருக்க குருத்துப்பூச்சியை கட்டுப்படுத்த வேண்டும்.

குருத்துப்பூச்சி நெல் பயிரின் இலை நுனியில் முட்டையிட்டு, இதிலிருந்து வெளிவரும் புழுக்கள் அடித்தண்டை சேதப்படுத்தி விடுகிறது. எனவே புரொப்பெனோபாஸ் அல்லது இன்டாசோகார்ப் மருந்துகளுடன், ஒட்டும் திரவங்களான சாண்டோவிட், பைட்டோவிட், லிங்காவிட் இவற்றில் ஏதாவது ஒன்றை ஏக்கருக்கு 100 மில்லி வீதம் கலந்து சீராக தெளித்து பயன்படுத்தினால் குருத்துப்பூச்சியை கட்டுப்படுத்தி மக‘ல் இழப்பனை தவிர்க்க முடியும். எனவே விவசாயிகள் இதை பயன்படுத்துமாறு முக்கூடல் வேளாண்மை உதவி இயக்குநர் மாரியப்பன் தெரிவித்தார்.

**நீர், நில வளத் திட்ட ஒருங்கிணைப்பு கூட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2011,02:59 IST

கருத்தை பதிவு செய்ய

செக்கானூரணி:செல்லம்பட்டி வட்டார நீர், நிலவளத் திட்ட அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகளின் ஒருங்கிணைப்பு கூட்டம் வாலாந்தூரில் நடந்தது.

ஊராட்சி தலைவர் கணபதி தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் அழகப்பன் முன்னிலை வகித்தார். துணை வேளாண் அலுவலர் சேகர், தோட்டக்கலை அலுவலர் மணிவேலு, மீன்வளத்துறை அலுவலர் வசந்தராஜன், வேளாண் விற்பனைத்துறை அலுவலர் ராமசாமி, வேளாண் பொறியியல் துறை அலுவலர் செல்வேந்திரன், பொதுப்பணித்துறை அலுவலர் மாயக்கண்ணன், வேளாண் பல்கலை உதவி பேராசிரியர் பத்மநாபன் அரசு திட்டங்கள் குறித்து விளக்கினர். விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் அவர்கள் பதிலளித்தனர்.

**காளையார்கோயிலில் நெல் பயிரில் நோயை கட்டுப்படுத்த ஆலோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2011,22:14 IST

கருத்தை பதிவு செய்ய

காளையார்கோவில் : காளயார்கோவில் நெல் சாகுபடியில் நோய் தாக்குதலை குணப்படுத்த வேளாண்மை அலுவலர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். காளையார்கோயில் ஒன்றியத்தில் 11 ஆயிரம் எக்டேரில் விவசாயிகள் நெல்சாகுபடி செய்துள்ளனர். நெல்சாகுபடியில் புகையான் மற்றும் செந்தாளை நோய்தாக்கி மகசூல் பாதிக்கும் நிலை உள்ளது. வேளாண்மை உதவி

இயக்குநர்(பொறுப்பு) கணேசன் , வேளாண்மை அலுவலர் ஜைனுல் பவுஜியா ராணி மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் பள்ளித்தம்மம் பகுதியில் பார்வையிட்டனர். நெல் பயிரின் நுனி கருகியும், வெளுத்தும் இருந்தால் புகையான் நோய் தாக்கம் காணப்படும்.ஒரு ஏக்கருக்கு டிரைசைகுளோசோல் 120 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவேண்டும். அல்லது சூடோமோனஸ் ஜெல் 250 கிராம் 200லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் புகையான் நோய் சரியாகிவிடும் என வேளாண்மை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விளைச்சல் அதிகரிப்பால் தேங்காய் விலை வீழ்ச்சி : தேவை கொள்முதல் மையம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2011,22:34 IST

கருத்தை பதிவு செய்ய

சேத்தூர் : தேங்காய் விளைச்சல் அதிகரிப்பால் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்க, விவசாயிகள் அரசை வலியுறுத்தியுள்ளனர். மாவட்டத்தில் சேத்தூர், ராஜபாளையம், வத்திராயிருப்பு, ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் சுற்று பகுதிகளில் 30 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு 5 முதல் 6 ரூபாய்க்கு விற்கப்பட்ட தேங்காய். தற்போது ரூ.2.50லிருந்து 3 வரை விற்பனையாகிறது.இதன் விலை வீழ்ச்சியால் தென்னை விவசாயிகள் பாதிக்கின்றனர். தென்னை பராமரிப்பு செலவுகள் அதிகரித்தும் வரும் நிலையில்,இதன் விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. கொப்பரை தேங்காய் கிலோ ரூபாய் 55க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால் இங்கு கொள்முதல் நிலையம் இல்லாததால் ரூபாய் 29 க்கு விற்பனையாகுகிறது. விவசாய சங்க மாவட்ட செயலாளர் அம்மையப்பன் கூறியதாவது: உரம், இடு பொருட்களின் விலை, பராமரிப்பு செலவு ஆண்டுக்கு ஆண்டு உயர்கிறது. தென்னை விவசாயிகளை நஷ்டத்திலிருந்து காக்க,விருதுநகரிலும் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும், என்றார்.

**விவசாயிகள் குறை தீர்வு கூட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2011,22:44 IST

காஞ்சிபுரம் : காஞ்சிபுரத்தில், நாளை, மாவட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர்வு கூட்டம் நடைபெற உள்ளது.கலெக்டர் அலுவலகத்தில், காலை 11 மணிக்கு கூட்டம் நடைபெறும்.

கலெக்டர் (பொறுப்பு) சுதர்சன் தலைமை தாங்குகிறார். கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு, தங்கள் கருத்துக்களையும், குறைகளையும் தெரிவிக்கலாம்.

---

தினகரன்

**நெடுஞ்சாலை, ஷாப்பிங் மால்களில் இளநீர் விற்பனை பார்**

பதிவு செய்த நாள் : 12/28/2011 1:16:44 AM



கொச்சி : நாடு முழுவதும் நெடுஞ்சாலைகள் மற்றும் ஷாப்பிங் மால்களில் 5,000 இளநீர் விற்பனை பார்கள் திறக்க தென்னை வளர்ச்சி வாரியம் திட்டமிட்டுள்ளது. இதுதொடர்பாக வாரியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: குளிர்பானங்களுக்கு போட்டியாக, நாடு முழுவதும் உள்ள முக்கிய நெடுஞ்சாலைகள் மற்றும் ஷாப்பிங் மால்களில் 5,000 நடமாடும் இளநீர் விற்பனை பார்கள் திறக்கப்படும். இதில், இளநீர் லெசி, இளநீர் ஷேக் மற்றும் இளநீர் ஆகியவை சுகாதாரமான முறையில் விற்பனை செய்யப்படும்.

200 முதல் 300 இளநீர்களை கொண்டு செல்லும் வகையில் கவர்ச்சிகரமான வண்டிகளுக்கான பல்வேறு மாதிரிகள் தனியார் நிறுவனங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. அதிலிருந்து 2 மாடல்கள் தேர்வு செய்யப்படும். அந்த வண்டிகளில் இளநீரினால் உண்டாகும் பயன்கள் பற்றிய விளக்கங்கள் எழுதப்பட்டிருக்கும்.

தொழில்முனைவோர்களுக்கு இந்த திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நடமாடும் வண்டிகளுக்கான நிதியுதவியை வாரியம் ஏற்பாடு செய்து தரும். எதிர்காலத்தில், இந்த நடமாடும் வண்டிகளுக்கான பொது டிரேடுமார்க் மூலம் தேங்காய் பருப்புகளையும் சுகாதாரமான முறையில்

பாக்கெட்டில் அடைத்து விற்பனை செய்யப்படும். இதுதொடர்பாக மேலும் விவரம் அறிய தென்னை வளர்ச்சி வாரிய இணையதளத்தை பார்க்கலாம்.

---

## *தமிழக அரசு அறிவித்துள்ள 50 சதவீத கட்டண சலுகையுடன் விவசாயிகளுக்கான பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கை 18–ந் தேதி தொடங்குகிறது*

*கோவை, டிச.28–*

*தமிழக அரசு அறிவித்துள்ள 50 சதவீத கட்டண சலுகையுடன் விவசாயிகளுக்கான பட்டப்படிப்பு தொடங்கப்பட்டு உள்ளது. இதற்கான மாணவர் சேர்க்கை வருகிற 18–ந் தேதி தொடங்குகிறது.*

*பட்டப்படிப்பு*

*கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக திறந்தவெளி மற்றும் தொலைதூர கல்வி வாயிலாக விவசாயிகள் பயன் பெறும் வகையில் இளநிலை பண்ணைத் தொழில்நுட்ப (பி.எப்.டெக்) படிப்பு தொடங்கப்பட்டு உள்ளது. இதற்கான பாடத்திட்டம் அனுபவம் பெற்ற விஞ்ஞானிகள் மற்றும் பேராசிரியர்களை கொண்டு விவசாயிகளுக்காக எளிய தமிழில் கற்பிக்கப்படுகிறது. மேலும் எளிய முறையில் செயல்முறை விளக்கங்களுடன் கூடிய 3 ஆண்டு கால படிப்பாக 6 பருவ காலம் கொண்டதாக இந்த பட்டப்படிப்பு அமைந்துள்ளது.*

*இந்த பாடத்திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி, பயிர் பாதுகாப்பு, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், மனையியல், வேளாண் பொருளாதாரம், சந்தைபடுத்துதல் வனவியல், கால்நடை மேலாண்மை, சிறு தொழில் முனைதல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பண்ணை பார்வையிடல் ஆகிய தலைப்புகளில் பாடங்கள் வடிவமைக்கப்பட்டு உள்ளன. இந்த படிப்பை கற்கும் விவசாயிகள் சுயதொழில் தொடங்கவும், தங்களது தொழில் அறிவை அறிவியல் நுட்பத்தோடு மேற்கொள்ளவும் உதவும்.*

*கட்டண சலுகை*

*இவ்வாறு தொடங்கப்பட்டு உள்ள இந்த பட்டப்படிப்புக்கு தமிழக அரசு தைத் திருநாள் பரிசாக அரசின் விதிமுறைக்கு உட்பட்டு 50 சதவீத கட்டண சலுகை வழங்கி உள்ளது. இதற்கான 2–வது மாணவர் சேர்க்கை வருகிற ஜனவரி மாதம் 18–ந் தேதி தொடங்குகிறது. இந்த*

கட்டண சலுகை பெற விரும்பும் விவசாயிகள் 27 வயது நிரம்பியவர்களாகவும், 10–ம் வகுப்பு சென்றவர்களாகவும் இருக்க வேண்டும்.
இதற்கான விண்ணப்ப படிவங்களை பெற விரும்புவோர் வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்களுக்கு நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.
இந்த தகவலை வேளாண் பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்குனர் வள்ளுவபாரிதாசன் தெரிவித்தார்.

## முல்லை பெரியாறு அணை பிரச்சினையால் ஏலக்காய் வர்த்தக துறைக்கு பாதிப்பு

பி.கே.கிருஷ்ணகுமார்

கொச்சி

முல்லை பெரியாறு அணை பிரச்சினையால் ஏலக்காய் வர்த்தகத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

கேரளா

இதுகுறித்து ஏலக்காய் பண்ணை அதிபர் ரெஜி நிஜால்லனி கூறுகையில், “கேரளாவில் உள்ள ஏலக்காய் தோட்டங்களில் பணிபுரிய தமிழ்நாட்டிலிருந்து தினசரி 10,000 பேர் செல்லுகின்றனர். முல்லை பெரியாறு அணை பிரச்சினையால் தற்போது இவர்கள் வேலைக்கு செல்வதில்லை. எனவே கேரள ஏலக்காய் தோட்ட அதிபர்கள் அம்மாநிலத்திலுள்ள தொழிலாளர்களை பயன்படுத்துகின்றனர். இவர்களுக்கு அதிக கூலி கொடுக்க வேண்டும். இதனையடுத்து ஒரு கிலோ ஏலக்காயை பறிப்பதற்கான கூலி ரூ.200–250 யிலிருந்து ரூ.400–ஆக உயர்ந்துள்ளது” என்று தெரிவித்துள்ளார்.

மூலப்பொருள் விலை உயர்ந்துள்ளதால், ஒரு கிலோ ஏலக்காயை உற்பத்தி செய்வதற்கு ரூ.750–800–ஆகிறது. கேரள மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஆறு மணி நேரம் மட்டும் வேலை செய்வதற்கு ரூ.400 கூலி கேட்கின்றனர். எனவே தோட்டங்களிலிருந்து ஏலக்காய் பறிப்பது குறைந்துள்ளது என்று மைக்கேல் என்ற ஏலக்காய் தோட்ட அதிபர் தெரிவித்துள்ளார்.

பருவமழை

பருவமழை சாதகமாக உள்ளதால், நடப்பு ஆண்டில் ஏலக்காய் உற்பத்தி முந்தைய ஆண்டைக் காட்டிலும் 18 சதவீதம் அதிகரித்து 13,000 டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் போதுமான அளவிற்கு அறுவடை நடைபெறவில்லையென்றால் உற்பத்தியில் 3,000 டன் குறையும் என கூறப்படுகிறது.

ஏலக்காயை பறிப்பதற்கான கூலி உயர்ந்துள்ள நிலையில் அதன் விலை குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.